R 4400 (page 157) (தோந்தேடுக்கப்பட்ட பத்திகள்)

# மரணத்துக்கு ஏதுவான பாவமுண்டு

## "THERE IS A SIN UNTO DEATH"

1 யோவான்:5;16

R4400 : page 158

சபைக்கான பரீட்சையானது, இந்தச் சுவிசேஷ யுகத்தில் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தெரிந்த நிலையிலும், அறிந்த நிலையிலும் தன்னை அர்ப்பணம் பண்ணி பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிப்பதன் மூலமாய் அந்த அர்ப்பணமானது கார்த்தரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்க - இப்படி உள்ள ஒவ்வொரு நீதிமானாக்கப்பட்ட விசுவாசியும் - அப்படிப்பட்ட ஒவ்வொருவனும் - இப்பொழுது ஜீவன் அல்லது மரணத்திற்கான பரீட்சையில் காணப்படுகின்றான் மற்றும் அவனுக்கு எதிர்க்கால வாய்ப்பு என்ற எதுவும் இல்லை. வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமெனில், திரும்பக்கொடுத்தலின் காலங்களில் எப்படி உலகத்திற்கான பரீட்சையானது மனுஷீகத் தளத்தில் நித்திய ஜீவனை அருளி அல்லது நித்திய மரணத்தை அருளி முடிவு பெறுகின்றதோ, அதுபோலவே இந்த யுகத்தில் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டுக் காணப்படுபவர்களின் பரீட்சையும், ஆவிக்குரிய தளத்தில் நித்திய ஜீவனை அருளி அல்லது நித்திய மரணத்தினை அருளி முடிவு பெறுகின்றதாயிருக்கும்.

ஆயிர வருட அரசாட்சியின்போது இரட்சிக்கப்படுபவர்கள் அனைவரும் நித்திய ஜீவனை அடைய வேண்டுமெனில், நிஜமான பூரண நிலையையும், தேவனுக்கு; முற்றும் முழுமையான இருதய நேர்மையையும், நீதியின் மீது முற்றும் முழுமையான அன்பையும், அக்கிரமத்தை வெறுத்த நிலையையும் அடைந்தாக வேண்டும். அப்படியானால் இந்த யுகத்திலுள்ள நீங்களும், நானுமாகிய ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் அனைவரும், ஒருவேளை நம்முடைய பரீட்சையின் காலப்பகுதியில், இருதய வளர்ச்சியினுடைய பூரணத்தை அடையவில்லையெனில், நாம் இரண்டாம் மரணம் அடைபவர்களாய் இருப்போம். நம்மிடத்தில் மாம்சத்தில் பூரணம் எதிர்ப்பார்க்கப்படாததற்காகத் தேவனுக்கு நன்றிச் செலுத்துகின்றோம் ஏனெனில் அது நம்மால் கூடாத காரியமாகும் மாறாக ஆவியின் பூரணமே, புதிய மனதின் பூரணமே, சித்தத்தின் பூரணமே எதிர்ப்பார்க்கப்படுகின்றது. ஆனால், ஓ! பூரண இருதயம் என்பது எத்தனை அதிகமான காரியங்களை உள்ளடக்குகின்றதாய் இருக்கின்றது! “இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்!” என்று நம் அருமை மீட்பர்; சொல்லியதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. இருதயத்தில் ஏதேனும் அசுத்தம், நோக்கத்தில் ஏதேனும் அசுத்தம், எந்தளவிலான தீமையான வாதங்கள், கோபம், பகைமை, வாக்குவாதம், இருதயத்தில் கசப்பு என்பவை பூரண அன்பாகிய - திவ்விய நியமத்திற்கு நாம் மிகவும் குறைவுப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகின்றதாய் இருக்கும்.

நியாயந்தீர்க்க நாம் ஆற்றலற்றவர்களாவோம். சிலர் தங்கள் இருதயத்தில் பூரண அன்பை உடையவர்களாய்க் காணப்படலாம் எனினும் தங்கள் மாம்சத்தினுடைய அபூரணங்கள்

R4401 : page 158

காரணமாய், பூரண அன்பைக் குறைவாய் வெளிப்படுத்திவிடுபவர்களாய் இருப்பார்கள். நம்முடைய அனுபவங்களை வைத்துப் பார்க்கையில் வெகு சிலரே தேவன் மீதும், சகோதர சகோதரிகள் மீதும், அயலார்கள் மீதும் தாங்கள் பூரண அன்பு கொண்டிருப்பதாக அறிக்கைப் பண்ண முடிகிறவர்களாக இருக்கின்றனர்.. இதில் சத்துருக்கள் மீதான அன்பைக் குறித்துச் சொல்லவேண்டியதேயில்லை. இம்மாதிரியான நிலைமையில் தங்கள் மரணத்தினுடைய தருவாயில் காணப்படும் ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்கள் அனைவரும், நித்தியமான ஜீவனுக்குப் பாத்திரமானவர்களாகக் கருதப்படுபவர்கள் மத்தியில் இடம்பெறுவதில்லை என்பதில் நமக்கு நிச்சயமே. இவர்களுக்கான ஒரே வழி இரண்டாம் மரணமேயாகும்.

இத்தகையவர்கள் “சிறுமந்தையினராய்” இருப்பதில்லை; காரணம் சிறுமந்தையினரின் அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் ’தேவனுடைய நேச குமாரனுடைய சாயலாக” வேண்டும் என்று தேவன் முன்தீர்மானித்துள்ளார். “தம்முடைய குமாரன் அநேக சகோதரருக்குள்ளே முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு, தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார” (உரோமர் 8:29). அப்படியானால் இதத்கையவர்கள் “திரள்கூட்டத்தினராக” முடியாதா? இல்லை என்றே நாம் பதிலளிக்கின்றோம். உபத்திரவத்தின் வாயிலாக ’திரள்கூட்டத்தினராகும்” அனைவரும், நித்திய ஜீவனுக்குப் பாத்திரமானவர்களாகக் கருதப்படுவதற்கு - இருதய பூரணத்தை - அடைந்தாக வேண்டும். ஜெயங்கொள்பவர்களாகிய “திரள்கூட்டத்தினருக்கும்,” முற்றிலும் ஜெயங்கொள்பவர்களாகிய “சிறுமந்தையினருக்கும்” இடையிலுள்ள வித்தியாசம் என்னவெனில், ’திரள்கூட்டத்தினர்” பலவந்தத்திற்குள்ளாகுகையில், தீர்மானம் எடுப்பதற்க்கான நிர்ப்பந்தத்திற்குள்ளாகுகையில் உண்மையுள்ளவர்களாய் நிரூபிகக்ப்படுவார்கள், ஆனால் “சிறுமந்தையினரோ” அதிகம் வைராக்கியம் உடையவர்களாய் இருப்பார்கள் ஊழியம் செய்வதற்கும், பாடுபடுவதற்கும், சிறுமந்தையாகுவதற்கும் என்றும் சந்தோஷமாய்த் தொடர்ந்து ஓடுகின்றவர்களாய் இருப்பார்கள் ஆனால் இந்த இரு வகுப்பாருமே - ஜெயங்கொள்பவர்களாகுவதற்கும், நித்தியமான ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்கும், பூரண அன்பு எனும் இலக்கை அடைந்தாக வேண்டும்.

---------------------

See more Books & Articles at www.foodfornewcreature.com